# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 03 - 2017

- "கிசான் சம்பதா யோஜனா" திட்டத்தின் கீழ் தமிழகத்தின் கோயம்பத்தூரில் 50 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய உணவு பூங்கா அமைக்கப்படவுள்ளது

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் (2.8.17) 8-ம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி முறையை ரத்து செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 5 மற்றும் 8-ம் வகுப்பு இறுதியாண்டு தேர்வுகளில் தோல்வி அடையும் மாணவர்களை FAIL ஆக்குவதற்கு மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். மறு தேர்வு நடத்த மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படும்.

- PEOPLE LINGUSTIC SURVEY OF INDIA (PLSI) எனும் அமைப்பு நடத்திய இந்திய மொழிகள் குறித்த ஆய்வில் இந்தியாவில் பேசப்படும் 780 மொழிகளில் அடுத்த 50 ஆண்டுகளில் 400-க்கும் மேற்பட்ட மொழிகள் அழிந்து விடும் நிலையில் உள்ளன என தெரிவித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் 250 மொழிகள் அழிந்து விட்டதாக இந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

- 2017 அக்டோபர் 1 முதல் இறப்புச் சான்றிதழ் பெற ஆதார் எண் அவசியம் என மத்திய அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு ஜம்மு காஷ்மீர், மேகாலயா, அஸ்ஸாம் மாநிலங்களை தவிர அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும். இதில் தவறான தகவல் அளித்தால் ஆதார் சட்டம் 2016-ன் படியும், பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1969-ன் படியும் குற்றமாக கருதப்படும்.

- படைவீரர்கள் தங்களது பதவி உயர்வு, பணிவிவரங்கள், மாத ஊதிய விவரங்கள் ஆகியவற்றை தெரிந்து கொள்ள இந்திய ராணுவம் "ஹாம்ராஸ்" எனும் செயலியை அறிமுகம் செய்துள்ளது. இதில் படிவம் 16 மற்றும் மாத ஊதிய விவரங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

- மதுரை நாகர்கோயில் இடையே மின்மயமான இரட்டை ரயில் பாதையை அமைக்க மத்திய அரமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- ❖ வெனிசூலாவின் அதிபர் நிக்கோலஸ் மாடுரோவை 'சர்வாதிகாரி' என்றழைத்து அவர் மீது தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

- ❖ நாட்டின் முதல் நதிநீர் இணைப்புத் திட்டம் (Ken-Betwa River Link Project) உத்திரபிரதேசம் மற்றும் மத்திச பிரதேச மாநிலங்களில் ஓடும் 16 ஆறுகளை இணைக்கும் வகையில் 2005-ம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் தேதி இரு மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது. இந்த பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதுவே நாட்டின் முதல் நதிநீர் இணைப்பு திட்டம் என மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமா பாரதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

- ❖ இந்திய ஹாக்கி அணியின் முன்னால் அணித்தலைவரான தன்ராஜ் பிள்ளைக்கு கிழக்கு வங்க கால்பந்து சங்கத்தின் மிகவுயரிய விருதான "பாரத் கௌரவ்" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
  இவ்வாண்டுக்கான கால்பந்தாளர் விருது – குரவிந்தர் சிங்
  இவ்வாண்டுக்கான கிரிக்கெட்டாளர் விருது – போடுபள்ளி அமித்
  வாழ்நாள் சாதனையாளர் விருது – சையத் நயீமுதின் மற்றும் சுபாஷ் போவ்மிக்

- ❖ அமெரிக்க புலனாய்வு அமைப்பான எ.்.ப்.பி.ஐ-யின் புதிய இயக்குநராக அதிபர் டொனால்ட் டிரம்ப்பால் பரிந்துறைக்கப்பட்ட கிறிஸ்டோ.்.பர் ரே-வை அந்த நாட்டு நாடாளுமன்றம் தேர்வு செய்துள்ளது.

- ❖ சென்னை – திருவனந்தபுரம் இடையே ரூ800 கோடியில் நீர்வழிச் சாலை அமைக்க திட்டமிட்டுள்ளதாக மத்திய நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்து துறை இணை அமைச்சர் பொன்ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

- ❖ பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியம் (International Telecommunication Union (ITU)) அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2017 ICT உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்கள் அறிக்கையின் படி உலகளவில் இணையம் பயன்படுத்தும் 830 மில்லியன் இளைஞர்களில் 39% பேர் இந்தியாவையும் சீனாவையும் சேர்ந்தவர்களாவர்.

OXFORD IAS ACADEMY